**O.S.No.262/2015**

**Date:10.10.2018**

**வாதி தரப்பு சாட்சி 3 - முருகேசன், த-பெ.கருப்பையா பண்டாரம்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பட்டா மாறுதலுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் தாத்தா பெயர் என்ன என்றால் அழகு ஆகும். கிரயப் பாத்தியப்பட்டுள்ளதா என்றால் தான செட்டில்மெண்ட்படி பாத்தியப்பட்ட சொத்து ஆகும். அந்த தான செட்டில்மெண்ட் எனக்கு கொடுக்கவில்லை என்றாலும், வழக்கிற்காக தானம் கொடுக்கப்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுக்கப்பட்டதா அல்லது செட்டில்மெண்ட் எழுதிக் கொடுக்கப்பட்டதா என்றால் தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுக்கப்பட்டது. தாவாச் சொத்து முத்துச்சேர்வையின் பூர்வீகச் சொத்தா என்றால் பூர்வீகச் சொத்துதான். அவர் உயிரோடு இருக்கும் போதே அவருக்கு சமாதி கட்டி, அவர் இறந்த பின்னர் அவரது சமாதியை பராமரிப்பதற்காக எனக்கு தாவாச்சொத்து வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எந்த நேரத்தில் சமாதியில் வேலை பார்க்கிறேன் என்றால் காலை மற்றும் மாலை 6 மணிக்கும் செல்வேன். என்ன செய்வேன் என்றால் விளக்கேற்றுவேன். சங்கு ஊதுவோம், வாரிசுதாரர்கள் கொடுப்பதை வைத்து பொங்கல் வைப்போம். தினமும் வாரிசுதாரர்களிடம் வாங்கி செய்வோமா என்றால் எண்ணெய் மட்டும் மாதந்தோறும் வாங்குவோம், ஒரு மாதத்திற்கு எவ்வளவு வாங்குவோம் என்றால் ஒன்று அல்லது இரண்டு லிட்டர் வாங்குவோம். கூட்டிப் பெருக்குவது இல்லையா என்றால் கூட்டிப், பெருக்குவோம். 2ம் வாதி யார் என்றால் என் அண்ணன் மகன் ஆவார். நான் எந்த நேரத்தில் சென்று வேலை செய்வேன் என்றால் மாலை 6 மணிக்குச் செல்வேன், 2ம் வாதி எப்போது செல்வார் என்றால் வருடம் ஒரு முறை சுழற்சி முறையில் செல்வோம். மேற்கண்டவாறு பணி செய்து கொண்டு இருப்பதை வழக்குரையில் தெரிவித்துள்ளேனா என்றால் சொல்லவில்லை. சமாதி இருக்கும் சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. என் தாத்தாவின் மகன்கள் எத்தனை பேர் என்றால் மூன்று பேர் ஆவார்கள். நான் எத்தனையாவது நபரின் மகன் என்றால் மூத்தவர் கருப்பையாவின் மகன் ஆவேன். தான செட்டில்மெண்ட் சொத்தில் அனுபவ உரிமை மட்டுமா அல்லது முழு உரிமை உள்ளதா என்றால் எங்களுக்கு விற்பதற்கு பாத்தியம் இல்லை. முத்துச்செல்வன் இறந்த பின்னர் அவரது மகன் பெயர் தெரியுமா என்றால் மகன் பெயர் பெரியபுலியன் ஆகும். மருமகள் பெயர் அனந்தாயி ஆகும். அவர்களுக்கு வாரிசுகள் இலல்ல என்றால் சரிதான். அவர்களின் சொத்துக்களை அவர்களின் உறவுகளுக்கு தான செட்டில்மெண்ட் எழுதிய விபரம் தெரியுமா என்றால் அவர்களுக்குச் சொத்துக்கள் இல்லை. பட்டா மட்டும் அவர் பெயரில் உள்ளது. அனந்தாயி இறந்த பின்னர் தற்போது

யாரிடம் எண்ணெய் வாங்கி வருகிறேன் என்றால் யாரும் கொடுக்கமாட்டார்கள், பங்காளிகளிடம் கேட்ட போது, சொத்து எழுதி வைத்துள்ளதால் என்னையே எண்ணெய் வாங்கிக் கொள்ளச் சொல்லி விட்டார்கள். நான் பணிவிடை தொடர்ந்து செய்து வரவில்லை என்றால் சரியல்ல. தாவாச் சொத்தை வேண்டுமென்றே அபகரிப்பதற்காகத்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், தாவாச் சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. எனக்கு நிபந்தனையுடன் கூடிய செட்டில்மெண்ட் மட்டுமே உள்ளது என்றால் நிபந்தனை இருக்கிறது. பணிவிடை செய்யாத பட்சத்தில் என்னை தாவாச் சொத்திலிருந்து வெளியேற்ற உரிமை உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். தான செட்டில்மெண்ட் கிடையாது என்றாலும், நான் வேண்டுமென்றே தான செட்டில்மெண்ட் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு கெட்ட எண்ணத்தில், சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, மேற்படி இடத்தை பிளாட் போட்டு விற்க முயற்சித்தார்கள், அதனால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.